දුරකථන ) 0112669192 , 0112675011
தொலைபேசி ) 0112698507 , 0112694033
Telephone ) 0112675449 , 0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax )0112692913

විද්‍යුත් තැපෑල )postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
e-mail )

වෙබ් අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )
website )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

මගේ අංකය )
எனது இல )
My No. ) DGHS/Circular/2016-127

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி )
Date ) 2016.02.10

# සෞඛ්‍ය, පෝෂණ සහ දේශීය වෛද්‍ය අමාත්‍යාංශය
# சுகாதார,போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
# Ministry of Health, Nutrition & Indigenous Medicine

பொது சுற்றறிக்கை இலக்கம் : 01 – 08 / 2016

சகல மீகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
மத்திய அரசின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற சகல போதனா வைத்தியசாலைகள் மற்றும்
பொது வைத்தியசாலைகளின் தலைவர்களுக்கு,

**மருத்துவ சிகிச்சைகளுக்காக வைத்தயசாலைகளில் அனுமதிக்கப்படுகின்ற பிக்குகளின் மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்வதற்கு வெளி நிறுவனங்களுக்கு அனுப்புதல்**

மருத்துவ சிகிச்சைகளுக்காக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுகின்ற பிக்குகளுக்கு மேற்கொள்ளப்படவேண்டிய மருத்துவ பரிசோதனைகள் வெளி நிறுவனங்களுக்கு அனுப்புவதாகவும், அதனால் அவர்கள் முகங்கொடுக்க வேண்டிய பிரச்சனைகள் தொடர்பாக அவர்களினால் கௌரவ பௌத்த சாசன அமைச்சருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஷேடமாக துறவரம் பூண்டு ஆசிரமங்களில் வாழுகின்ற பிக்குகளால் பணம் கையாளப் படாமையால் இந்நிலைமை மிகவும் சிக்கல் நிலையைத் தோற்றுவித்துள்ளதாகவும், பிக்குகளுக்கு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளும் போது வெளி நிறுவனங்களுக்கு அனுப்பாமல் வைத்தியசாலைகளினூடாக அவற்றை செய்து கொள்வதற்கு விஷேட கவனம் செலுத்தும்படியும் சகல வைத்தியசாலை தலைவர்களுக்கும் அறிவுறுத்துமாறு பௌத்த சாசன கௌரவ அமைச்சரினால் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, கௌரவ பௌத்த சாசன அமைச்சரின் அறிவுறுத்தலுக்கு அமைய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுகின்ற பிக்குகளுக்கு மேற்கொள்ளவேண்டிய மருத்துவ பரிசோதனைகள் உங்கள் நிறுவனத்தினூடாகவே மேற்கொள்ளுமாறும், அதற்காக உரிய பிரிவினரை விழிப்பூட்டுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்குமாறும் உங்களுக்கு அறியத்தருகின்றேன்.

டாக்டர் பீ.ஜீ மஹீபால
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

பிரதிகள் :

1. கௌரவ சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் - தகவலுக்காக
2. சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய செயலாளர் - தகவலுக்காக